# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0195/2015

ஆணை எண்: 0201/2016

நாள்: 07/12/2016

திரு. என். குமாரசாமி (எ) தமிழ்மணி,
225, பெருமாள் கோயில் வீதி,
எலத்தூர், எ.செட்டிப்பாளையம் (அஞ்சல்),
கோபி தாலுகா,
ஈரோடு மாவட்டம் – 638 458. – மனுதாரர்

செயல் அலுவலர்,
எலத்தூர் பேரூராட்சி,
எ.செட்டிப்பாளையம்,
ஈரோடு மாவட்டம் – 638 458. – எதிர் மனுதாரர்

ஈரோடு மாவட்டம், எலத்தூர் பேரூராட்சியைச் சேர்ந்த திரு. என். குமாரசாமி (எ) தமிழ்மணி என்பவரின் மனு 01–09–2015 அன்று பெறப்பட்டு இம்முறை மன்ற நடுவத்தில் 0195/2015 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது:–

## ஆணை

ஈரோடு மாவட்டம், எலத்தூர் பேரூராட்சியைச் சேர்ந்த என். குமாரசாமி (எ) தமிழ்மணி அவர்களின் முறையீட்டு மனுவில் மனுதாரர் கீழ்க்கண்டவாறான புகார்களை தெரிவித்துள்ளார்:–

> "இந்த 10 ஆண்டுகள் 949/1 வருவாய் ஆவணத்தில் பாதை என உள்ளது இதை பேரூராட்சி அலுவலர்கள் தனியாருக்கு வரைபடம் அங்கீகாரம் இல்லாமல், விதி முறையை மீறி நகராட்சிகள் சட்டத்திற்கு அப்பாற்பட்டு திரு. ஆறுமுகம் என்பவருக்கு பாத்ரூம் கட்ட அனுமதி கொடுத்து உள்ளார்கள். மேலும், மாவட்ட ஆட்சியருக்கும், தாசில்தாருக்கும் தவறான தகவலை தருகிறார்கள் என்றும் 789/31-ல்

எந்தவிதமான ஆக்கிரமிப்பும் இல்லை எனவும் 949/1 அரசுக்கு ஒதுக்கீடு செய்த உபரி இடம் ஆனால் அரசுக்கு சொந்தம் இல்லை என தவறான அறிக்கை தருகிறார்கள் எனவும் பொதுசொத்தை எலத்தூர் பேரூராட்சிக்கு காப்பாற்றி தருமாறும்'' மனுதாரர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இம்முறையீடு குறித்து இம்முறைமன்ற நடுவம் 08.09.2015 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் எலத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை சமர்ப்பித்திட ஆணையிடப்பட்டது. இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை நகல் ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிபாளையம் வட்டாட்சியருக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. பேரூராட்சி செயல் அலுவலரது ந.க.எண்:206/2015, நாள்:01.10.2015 நாளிட்ட விளக்க அறிக்கையில் ஈரோடு மாவட்டம் எலத்தூர் பேரூராட்சி எலத்தூர் அ. கிராமம் சர்வே எண்.949/1 மற்றும் 789/31ல் உள்ள இடம் 05.03.2015 தேதியில் உள்வட்ட அலுவலர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்களால் அளந்து அத்துக் காட்டப்பட்டுள்ளது. என செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். இதனிடையே 28.10.2015 நாளிட்ட முறைமன்ற நடுவ அறிவிப்பாணை வாயிலாக எலத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைக்கப்பட்டார். அவ்விசாரணையின் போது செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.

*"நான் கடந்த 1 1/2 ஆண்டு காலம் எலத்தூர் பேரூராட்சியின் நிர்வாக அலுவலராகவும் தற்போது பி.மேட்டுபாளையம் செயல் அலுவலராகவும், எலத்தூர் பேரூராட்சி செயல் அலுவலராக கூடுதல் பொறுப்பிலும் உள்ளேன். திரு.தமிழ்மணி என்பவரின் முறையீடு சம்பந்தப்பட்ட மனு எனக்கு கிடைக்கப்பெற்றது. எலத்தூர் சர்வே எண்.789/31,949/1 ஏற்கனவே, இவரது புகார் மனு குறித்து நில அளவை வட்டாட்சியருக்கு உரிய கட்டணம் கட்டி பாதையை அளந்து காட்டுமாறும் ஆக்கிரமிப்புகளை அகற்றுமாறும் வட்டாட்சியருக்கு 27.02.2015ல் என்னால் கடிதம் அனுப்பப்பட்டு மீண்டும் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் எலத்தூர் உள்வட்ட ஆய்வாளர் (நில அளவைத்துறை) ஆகியோரால் அளந்து காட்டப்பட்டது. அப்போது கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில வருவாய் ஆய்வாளர் ஆகியோர் உடனிருந்தனர். நில அளவை முடிவில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை என கண்டறியப்பட்டது. மனுதாரரும் நில அளவையின் போது உடனிருந்தார். இந்நிலையில் தனிப்பட்ட விரோதம் காரணமாக 2006-ஆம் ஆண்டு முதல் இதுபோன்று மனு செய்து வருகின்றார். எனவே இம்மனுவில் உண்மை ஏதுமில்லை எனத் தெரிவித்துக்கொள்கிறேன். மனுவில் குறிப்பிட்டது போன்று மனுதாரரால் உயர்நீதிமன்ற உத்தரவு எதுவும் எனக்கு வழங்கப்படவில்லை. எனவும் தெரிவித்துக்கொள்கிறேன். 2002–ஆம் வருடம் ஆகஸ்டு 28–ஆம் நாளிட்ட நன்கொடை பத்திரம் எதுவும் எங்கள் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படவில்லை. மேலும் இது பதிவு செய்யப்படாத ஆவணம். நிலம் நன்கொடை பெறுவது சம்பந்தமாக பேரூராட்சியில் தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை எனவும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் குறிப்பிட்டது போல் அந்த இடம் பேரூராட்சிக்கு சொந்தமான இடம் அல்ல."*

பின்னர், 19.11.2015 நாளிட்ட முறைமன்ற நடுவ அறிவிப்பாணை வாயிலாக மனுதாரர் 16.12.2015 அன்று விசாரணைக்கு ஆஜராகி விளக்கமளிக்குமாறு ஆணையிடப்பட்டது. மனுதாரர் தனது 04.12.2015 நாளிட்ட கடிதத்தில் விசாரணைக்கு ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்கவும், அல்லது மீண்டும் ஒரு தேதியில் விசாரணைக்கு வர உதவிடவும்,

அனுமதி அளித்தால் தபால் மூலம் பதில் சொல்ல அனுமதி அளிக்குமாறும் வேண்டிகொண்ட வகையில் 17.12.2015 நாளிட்ட இம்முறை மன்ற அறிவிப்பாணை வாயிலாக மனுதாரர் வேண்டியுள்ளவாறு நேரில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டும் முறையீட்டு மனுவிற்குரிய விளக்கத்தினை உரிய ஆதாரத்துடன் தாமதமின்றி அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவும் ஆணையிடப்பட்டது. எனினும் அறிவிப்பாணை எண்.195/முமந/2015-8/நாள் 03.02.2016 மற்றும் 13.05.2016 ஆகிய நாளிட்ட முறைமன்ற அறிவிப்பாணைகளின் மூலம், ச.எண்.949/1-ல் உள்ள பாதை ஆக்கிரமிப்பு, அங்கீகாரம் குறித்த புகார் மனுவிற்குரிய தொடர்புடைய ஆவணங்களுடன் உரிய விளக்கத்தினை சமர்ப்பித்திட நினைவூட்டப்பட்டும் மனுதாரர் தனது முறையீட்டு மனுவிற்கான விளக்கத்தினையும் ஆதார ஆவணங்களையும் சமர்ப்பிக்க முன்வரவில்லை.

மனுதாரர் முன்னிலையில் முறையீட்டு மனுவில் குறிப்பிடப்பட்ட பாதையை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் எலத்தூர் உள்வட்ட ஆய்வாளர் (நில அளவை துறை) ஆகியோரால் அளந்து காட்டப்பட்டு கிராம நிர்வாக அலுவலர் நில வருவாய் ஆய்வாளர் ஆகியோர் உடனிருந்த நிலையில் நில அளவை முடிவில் ஆக்கிரமிப்பு ஏதுவுமில்லை என செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதை ஏற்றும் மனுதாரர் இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகாமலும் புகார் மனுவிற்குரிய விளக்கத்தினை ஆதாரங்களுடன் சமர்ப்பிக்க முன்வராததாலும், தனது முறையீட்டு மனுவினை உரிய படிவத்தில் சமர்ப்பித்திட முறைமன்றம் ஆணையிட்டும் அவ்வகையில் மனுதாரர் முறையீட்டு மனுவினை சமர்ப்பிக்காத நிலையிலும் மனுதாரரின் புகார் உண்மைக்கு புறம்பானது என இம்முறைமன்றம் கருதுகிறது.

மேற்கூறிய நிலையில் செயல் அலுவலர் விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றை ஏற்று மனுதாரர் புகார் மனுவினை நிராகரிக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2016-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3-ம் நாள் அன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. செயல் அலுவலர்,
   எலத்தூர் பேரூராட்சி,
   எ.செட்டிப்பாளையம்,
   ஈரோடு மாவட்டம் – 638 458.

2. திரு. என். குமாரசாமி (எ) தமிழ்மணி,
   225, பெருமாள் கோயில் வீதி,
   எலத்தூர், எ.செட்டிப்பாளையம் (அஞ்சல்),
   கோபி தாலுகா,
   ஈரோடு மாவட்டம் – 638 458.